கோபுர தரிசனம்
கோடி புண்ணியம்

ஆலய தரிசனம்
பாவ விமோசனம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
அருள்மிகு சிதம்பரேஸ்வரர் உடனாய சிவகாமி அம்பாள் துணை



புதுக்கோட்டை மாவட்டம் - நற்சாந்துபட்டி

அருள்மிகு சிதம்பரேஸ்வரர் உடனாய சிவகாமி அம்பாள் ஆலய

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நூதன இராஜகோபுர சகித

மகா கும்பாபிஷேகப் பெரும் சாந்திப் பெருவிழா அழைப்பிதழ்

அருள்மிகு சித்தி விநாயகர் துதி

உலகுயர் செல்வம் எல்லாம் ஓரிடத்து அடைத்தோம் என்று
வளமுற வாழ்வோர் எல்லாம் மகிழுநற் சாந்துபட்டித்
தலமிசைக் கோயில் கொண்டு தன் அடைந்தார்கட்கு இன்பப்
பலனருள் அமலன், சித்திவிநாயகன் பதங்கள் போற்றி.

அருள்மிகு சுப்பிரமணியர் துதி

திருவளர் குறமானோடு தெய்வ குஞ்சரமும், பக்கல்
மருவ, நன்மயில் மீதேறி, மதி நலம் பெருகும் அன்பர்
உருவளர் அகமேபோல, ஓங்குநற் சாந்துபட்டிக்
குருவளர் கோயில் மேய குமரன் தாள் சென்னிசேர்ப்போம்.

அருள்மிகு சிதம்பரேசுவரர் துதி

சீர்பூத்த நற்சாந்துத் திருநகரில் தனவணிகர் சிறப்பச் செய்த
ஏர்பூத்த திருக்கோயிலில் காதல் மலிதர வந்திருந்து வாழும்
தேர்பூத்த தில்லை நகர்ச் சிவகாமி மகிழ்கூரும் சிதம்பரேசர்
நார்பூத்த திருவடிகள் நலம்பூத்த பேரன்பால் நயந்து வாழ்வோம்.

அருள்மிகு சிவகாமி அம்பாள் துதி

மேயபல் உலகம் எல்லாம் வேண்டுவ அளிக்கும் தெய்வத்
தாயென மறைகள் போற்றத் தண் அருள் வடிவு கொண்டு
நாயகனுடன், நற்சாந்து நகரத்தார் கோயில் மேய
ஆய் அருள் சிவகாமித்தாய் அடி, முடிக்கொண்டு வாழ்வோம்.

அருள்மிகு சண்டீசர் துதி

விண்ணவரேனும் சிவபிரான் பக்தி மேவிலார் ஆயின் நல்வினையும்
திண்ணிய பாவம் எனப்படும் என்று சிறுவிதி தெரிப்ப, அன்பின ரேல்
மண்ணவரேனும் வெய்ய பாதகமும் மறுவில் நல்வினை எனப்படு மென்று
அண்ணல் அம்புவியில் தெரித்த சண்டீசர் அடிமலர் முடிமிசைப் புனைவாம்.

வாழ்த்து

வாழ்க அந்தணர் ; வானவர், ஆனினம் ;
வீழ்க தண்புனல் ; வேந்தனும் ஓங்குக !
ஆழ்க தீயதெல்லாம் ; அரன் நாமமே ;
சூழ்க வையக மும்துயர் தீர்கவே.

நற்சாந்துபட்டி மிக நல்லவர்கள் வாழுமூர்
பொற்புடைய நகரத்தார் புகழ்விளக்கும் புனித ஊர்
கற்பவர்கள் மிகுந்த ஊர் கல்வியினில் கரைகண்ட
விற்பனரை எந்நாளும் வியந்தேத்தும் பேரூரே.

இறையன்புடையீர்!

திருமலைசமுத்திரம் என்னும் நற்சாந்துபட்டியில் கோயில் கொண்டிருக்கும், அருள்மிகு சிதம்பரேஸ்வரர் உடனாய சிவகாமி அம்பாள் எனும் திருநாமம் தாங்கி, தன வைசிகர்களாகிய நகரத்தார் மக்கள் போற்றிப் பணிந்து வழிபாடு செய்து வரும் இறைவனுக்கு, மிகவும் உத்தமமான கல்லாஹார வேலைப்பாடுகளுடன் கூடிய ஆலயத்தை வர்ணவேலைப்பாடுகள் செய்வித்தும், புதியதான முறையிலே, ஐந்து நிலை இராஜகோபுர வேலைகளைச் செய்வித்தும், அன்பே சிவமாய் விளங்கும் இறைவனுக்கும், பரிவார தெய்வங்களுக்கும்,

நிகழும் மங்களகரமான சார்வரி வருடம், மாசி மாதம் 12-ஆம் நாள் **(24 - 02 - 2021) புதன்கிழமை,** வளர்பிறையும், துவாதசி திதியும், புனர்பூச நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில், **காலை 9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள்,** மீன லக்னத்தில், **மகாகும்பாபிஷேகம்** நடைபெற உள்ளதால், ஆன்மீக அன்பர்கள், நகரத்தார் பெருமக்கள் அனைவரும் திரளாகக் கலந்து கொண்டு, இறைவனின் திருவருளால், அஷ்டலட்சுமியின் அஷ்ட ஐஸ்வர்யங்களையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வளமுடன் வாழ அனைவரையும் வருக! வருக!! என அன்புடன் அழைக்கின்றோம்.

... அன்புடன் ...

தனவைசியர்களாகிய நற்சாந்துபட்டி நகரத்தார்கள்

சர்வ சாதகம் : ஆகம பிரவீனா - சைவாகம பூஷணம் - சிவாகம கலாநிதி **சிவஸ்ரீ G.செல்வ கபில சிவாச்சாரியார்,** கபிலர்மலை

தமிழ்த்திருமுறை : தேவார இசைமணி - தெய்வத்தமிழ் - இன்னிசைச் செல்வர்
அண்ணாமலை பல்கலைக்கழக இசைக்கல்லூரி தேவார விரிவுரையாளர் **இரா. பாலசுப்ரமணிய ஓதுவார்,** சிதம்பரம்

யாகசாலை பூஜை காலங்களில் தமிழ் திருமுறை ஓதப்படும்

நற்சாந்துபட்டி
24-01-2021

முக கவசம் அணிந்து, தனிமனித இடைவெளியுடன் ஆலய தரிசனம் செய்ய வேண்டுகிறோம்

ஐஸ்வர்யா ஆப்செட் பிரஸ், கீழ 2-ஆம் வீதி, புதுக்கோட்டை. செல் : 94422 26578

நிகழ்ச்சி நிரல்

நாள்	நேரம்	விபரம்
மாசி மாதம் 7-ஆம் நாள் (19 - 02 - 2021) வெள்ளிக்கிழமை	காலை 7.00 To 10.30 மணிக்குள்	மங்கள இசை, விநாயகர் வழிபாடு, புண்ணியாகம், பஞ்சகவ்யம், ஷோடச மகா கணபதி யாகம், அஷ்டலட்சுமி யாகம், திரவியாகுதி, பூர்ணாகுதி.
	மாலை 5.00 To 7.30 மணிக்குள்	வாஸ்து பூஜை, பிரவேச பலி, ரக்ஷோக்ன ஹோமம், பூர்ணாகுதி.
மாசி மாதம் 8-ஆம் நாள் (20 - 02 - 2021) சனிக்கிழமை	காலை 8.00 To 11.00 மணிக்குள்	சுதர்சன யாகம், தன்வந்திரி, லெட்சுமி, மஹா விஷ்ணு யாகம்.
	மாலை 5.00 To 8.00 மணிக்குள்	சாந்தி ஹோமம், திசா ஹோமம், மூர்த்தி ஹோமம்.
மாசி மாதம் 9-ஆம் நாள் (21 - 02 - 2021) ஞாயிற்றுக்கிழமை	காலை 8.30 To 11.00 மணிக்குள்	அக்னி சங்கிரகனம், பரிவார மூலமூர்த்தி கலாகர்ஷனம் பூஜை
	மாலை 4.00 To 8.30 மணிக்குள்	அங்குரம், ரக்ஷா பந்தனம், கும்பாலங்காரம் யாகசாலை பிரவேசம், முதல்கால யாக பூஜை பூர்ணாகுதி.
மாசி மாதம் 10-ஆம் நாள் (22 - 02 - 2021) திங்கட்கிழமை	காலை 7.20 To 12.00 மணிக்குள்	இரண்டாம் கால யாக பூஜை, பூர்ணாகுதி.
	மாலை 5.00 To 8.30 மணிக்குள்	மூன்றாம் கால யாக பூஜை, பூர்ணாகுதி.
மாசி மாதம் 11-ஆம் நாள் (23 - 02 - 2021) செவ்வாய்கிழமை	காலை 8.30 To 12.00 மணிக்குள்	நான்காம் கால யாக பூஜை, பூர்ணாகுதி.
	மாலை 5.00 To 8.30 மணிக்குள்	ஐந்தாம் கால யாக பூஜை, பூர்ணாகுதி.
மாசி மாதம் 12-ஆம் நாள் (24 - 02 - 2021) புதன்கிழமை	அதிகாலை 5.00 மணிக்கு	ஆறாம் கால யாக பூஜை, பூர்ணாகுதி.
	காலை 9.20 மணிக்கு	**ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் உடனாய சிவகாமி அம்பாள் பரிவார தேவதைகள், இராஜகோபுர விமான மகாகும்பாபிஷேகம்**
	காலை 10.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள்	**மூல மூர்த்தங்கள் மகாகும்பாபிஷேகம்**
	மதியம் 2.00 மணிக்கு	**மகா அபிஷேகம்**

இரவு - பஞ்சமூர்த்திகள் திருவீதி உலா

ஐஸ்வர்யா ஆப்செட் பிரஸ், கீழ 2-ஆம் வீதி, புதுக்கோட்டை. செல் : 94422 26578

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருள்மிகு சிதம்பரேஸ்வரர் உடனாய சிவகாமி அம்பாள் துணை

நூல் அஞ்சல்

புதுக்கோட்டை மாவட்டம் - நற்சாந்துபட்டி

அருள்மிகு சிதம்பரேஸ்வரர் உடனாய சிவகாமி அம்பாள் ஆலய

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நூதன இராஜகோபுர சகித

மகா கும்பாபிஷேகப் பெரும் சாந்திப் பெருவிழா அழைப்பிதழ்

நாள் : 24 - 02 - 2021 புதன்கிழமை

திருமதி/திரு. .....

அவர்கள்

.....

.....

.....

அனுப்புதல் :

கும்பாபிஷேக கமிட்டி

நகரச் சிவன் கோவில், நற்சாந்துபட்டி,

புதுக்கோட்டை மாவட்டம் - 622 404.

கோபுர தரிசனம்!
கோடி புண்ணியம்!!

ஆலய தரிசனம்!
பாவ விமோசனம்!!